# சாவகச்சேரி ஊர் ஆவணப்படுத்தல் செயற்றிட்டம்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த அணுக்கத்தில் வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டு

## செயற்றிட்ட சுருக்கம்

ஊர் ஆவணப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமானது நூலக நிறுவனத்தின் வியூகதிட்டத்துக்கமைய அடையாளங்காணப்பட்ட முன்னெடுப்பு. இனவரையியில் அடிப்படையில், ஊர் தொடர்பில் சேகரிக்கப்படவேண்டிய தகவல்கள், தரவுகள் பற்றிய ஒரு சட்டகம் (வார்ப்புரு) விஞ்ஞான தன்மையான முறையியலின் ஊடாக உருவாக்கப்பட்டு கிராமம் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன. அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் பண்பாடு மற்றும், பாரம்பரியம் என்பவற்றை கட்டிக்காப்பதில் முக்கிய பங்குவகிக்கும் பல ஊர்களின் வரிசையில் ஒன்றாக திகழும் சாவகச்சேரி ஊரின் சிறப்பம்சங்களை ஆவணப்படுத்துவது அத்தியாவசியமானதொன்றாக காணப்படுகின்றது.

## அறிமுகமும் பின்புலமும்

சாவகச்சேரி நகரம் சாவகச்சேரி நகர சபையினால் நிர்வாகம் செய்யப்படுகிறது.யாழ் மாவட்டத்தில் பரந்ததொரு நிலப்பரப்பை உள்ளடக்கியதும், தனித்துவமான பல பண்புகளைக் கொண்டதுமாக தென்மராட்சிப் பிரதேசம் உள்ளது. இம் மாவட்டத்தின் பொருளாதாரத்தில் கணிசமான பங்களிப்பினை வழங்குவதாக இப்பிரதேசம் உள்ளது. மேலும் சாவகச்சேரி நகரசபை 11 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி 31.29 சதுர கிலோமீட்டர்கள் பரப்பை தன்னகத்தே கொண்டுள்ளது.

## செயற்றிட்டத்துக்கான நியாயப்பாடு

யாழ்ப்பாண பண்பாட்டு பாரம்பரியத்தின் முக்கிய மையங்களுள் ஒன்றாக சாவகச்சேரி காணப்படுகின்றது. கல்வி, விவசாயம், தொழில் நடவடிக்கை மற்றும் கலை பண்பாட்டு ரீதியாக முக்கிய அம்சங்கள் நிறைந்த இடமாக விளங்குகிறது. சாவகச்சேரி தன்னகத்தே

பல்வேறு வரலாற்றுச்சிறப்பு மிக்க ஆலயங்களையும் , தேசிய மற்றும் உயர் தரப் பாடசாலைகளையும் கொண்டுள்ளது.

அந்த வகையில் சாவகச்சேரியில் வாரி வனநாதர் ஆலயம், வைரவ கந்தசுவாமி ஆலயம், சப்பச்சி மாவடி விநாயகர் ஆலயம், இத்தியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில், பன்றிதலைச்சி கண்ணகை அம்மன் ஆலயம், சுட்டிபுரம் அம்மன் கோயில், விழுவளை அம்மன் கோயில், தாளையடி அம்மன் கோயில், நுணாவில் களம் அம்மன் கோயில் , தென்னிந்திய திருச்சபை ஆதீனம், சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலயம் என பல புகழ் பெற்ற ஆலயங்களும் , தேவாலயங்களும் காணப்படுகிறன. அடுத்ததாக இங்கு அமைந்துள்ள பாடசாலைகளாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மட்டுவில் மகா வித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலயம், மகளிர் கல்லூரி ஆகியன காணப்படுகின்றன.

சாவகச்சேரியில் பல்வேறு பொதுச்சொத்துக்கள் மக்கள் தேவையிலும் நகர அபிவிருத்தியிலும் செல்வாக்கு செலுத்துகின்றன. உதாரணமாக சாவகச்சேரி சந்தை, தொடருந்து நிலையங்கள், கலை மன்றத்தின் கலாசார மண்டபம் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

இலக்குகளும் நோக்கங்களும்

சாவகச்சேரி தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தலும்

- வரலாறு மரபுரிமை தொடர்பான விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் மேம்படுத்தி சாவகச்சேரி ஊர் தொடர்பான பல்வேறு தகவல் மற்றும் தரவுகளைச் சேகரித்து இணைத்தல்
- ஊரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த ஊரின் முக்கிய வளங்களை (resources), அமைப்புக்களை (organizations), மனிதர்களை (people), தேவைகளை (needs) அடையாளம் கண்டு ஆவணப்படுத்தல்.
- ஊரிலே இருக்கின்ற சமூக ஏற்றத்தாழ்வுகள், கலாசாரப் பன்மைத்தன்மை போன்றவற்றினையும் அவற்றினது வரலாற்றினையும் வெளிக்கொண்டு வருதல்.

எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

ஒரு வருட காலப்பகுதிக்குள் இச்செயற்றிட்ட கள ஆய்வாளரால் சாவகச்சேரி தொடர்பான கீழ்க் குறிப்பிடப்படும் இலக்குகள் பூரணப்படுத்தப்பட்டு செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்படும்

| இலக்குகள் | அடைவு மட்டம் |
|---|---|
| ஆவணங்கள் | **600** |
| புகைப்படங்கள் | **120** |
| வாய்மொழி வரலாறுகள் | **48** |
| குறுங்கால ஆவணங்கள் | **240** |
| ஆளுமைக்குறிப்புகள் | **48** |

| | |
|---|---|
| நிறுவனக்குறிப்புகள் | **60** |
| நிகழ்வுகளை பதிவிடல் | **24** |

செயற்றிட்டப் பாதீடு

மொத்தப் பாதீட்டுத்தொகை - 3,189,419
**நூலகப் பாதீட்டுத்தொகை -** 1,011,700
**நன்கொடையாளர் பாதீட்டுத்தொகை** - 2,177,719